**RURAL WORKERS DEVELOPMENT SOCIETY (RWDS)**

# ஆண்டறிக்கை






2020-2021

# பொருளடக்கம்


- இராமநாதபுரம் மாவட்டம் வரைபடம்
- நிறுவனத் தகவல்
- அறிமுகம்
- நிறுவன அமைப்பு
- செயல் அறிக்கை
- அடைவுகள்
- வரவு - செலவு தணிக்கை அறிக்கை

# இராமநாதபுரம் மாவட்ட வரைபடம்



| நிறுவனத் தகவல் | |
|---|---|
| நிறுவனத்தின் பெயர் | ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மெண்ட் சொசைட்டி (RWDS) |
| பதிவு எண் | 93/2007 தமிழ்நாடு சங்க பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. |
| முகவரி | 1/230-3, பாரதி நகர், இராமநாதபுரம் - 623503 |
| அலைபேசி / தொலைபேசி எண் | 9443783341. |
| முதன்மை நிர்வாகி | வெ.சௌந்திரமாலதி |
| வங்கியின் பெயர் | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி. இராமநாதபுரம். |
| | தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, இராமநாதபுரம் |
| | கரூர் வைஷ்யா வங்கி, பாரதிநகர் கிளை |
| PAN எண் | AAAAR6899M |
| FCRA எண் | 075990100 |
| 12 AA பதிவு எண் | C.NO.101/179/CIT-II/2008-09 |
| 80 G பதிவு எண் | C.No.102/179/CIT-II/2008-09 |
| TAN பதிவு எண் | MRIR02580E |
| UNIQUE ID: | TN/2017/0165744 |


## செயற்குழு உறுப்பினர்கள் விபரம்

| வ.எண் | பெயர் | பொறுப்பு |
|---|---|---|
| 1 | திரு. டி.ஆர். சந்திரன் அவர்கள் | தலைவர் |
| 2 | திரு. வெ.சௌந்திரமாலதி அவர்கள் | செயலாளர் |
| 3 | திருமதி.ஞா.பசுபதி அவர்கள் | பொருளாளர் |
| 4 | திரு.பொ.சுப்பிரமணியன் அவர்கள் | துணைத்தலைவர் |
| 5 | திரு. பா.கண்ணன் அவர்கள் | உறுப்பினர் |
| 6 | திருமதி.ந.ராஜமணி அவர்கள் | உறுப்பினர் |
| 7 | திருமதி.அந்தோணியம்மாள் அவர்கள் | உறுப்பினர் |


## பொதுக்குழு உறுப்பினர்கள் விபரம்

| வ.எண் | பெயர் | பொறுப்பு |
|---|---|---|
| 1 | திரு. டி.ஆர். சந்திரன் அவர்கள் | தலைவர் |
| 2 | திருமதி.வெ.சௌந்திரமாலதி அவர்கள் | செயலாளர் |
| 3 | திருமதி. ஞா.பசுபதி அவர்கள் | பொருளாளர் |
| 4 | திரு.பொ.சுப்பிரமணியன் அவர்கள் | துணைத்தலைவர் |
| 5 | திரு. பா.கண்ணன் அவர்கள் | உறுப்பினர் |
| 6 | திருமதி.ந.ராஜமணி அவர்கள் | உறுப்பினர் |
| 7 | திருமதி.அந்தோணியம்மாள் அவர்கள் | உறுப்பினர் |
| 8 | திரு. R.காளிமுத்து அவர்கள் | உறுப்பினர் |
| 9 | திரு. ம.பெருமாள் அவர்கள் | உறுப்பினர் |

# நிறுவன அமைப்பு


மேலாண்மைக் குழு
இயக்குநர்
கணக்காளர்
ஒருங்கிணைப்பாளர்
ஆவணத்தொகுப்பாளர்
மேம்பாட்டுப்பணியாளர்கள்

# ORGANGRAM OF THE RURAL WORKERS DEVELOPMENT SOCIETY



# ஆண்டறிக்கை 2020 ___ 2021

**முகவுரை**

ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மென்ட் சொசைட்டி நிறுவனம் 2007ம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சமூக ஆர்வலர் குழுவினால் துவக்கப்பட்டது. இக்குழுவானது கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஒடுக்கப்பட்ட பனைத்தொழிலாளர் மக்களின் மேம்பாட்டுக்காக பணி செய்து வருவது குறிப்பிடத்தக்கது. இது தமிழ்நாடு சங்கப்பதிவுகள் சட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்: 93/2007. இதன் தலைமையகம் இராமநாதபுரத்தில் உள்ளது. இந்நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள் மற்றும் கிராமப்புற ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள் குறிப்பாக பனைத்தொழிலார்கள் மத்தியில் பணி செய்து வருகிறது.

**பணித்தளம்:**

மாநிலம்: தமிழ்நாடு

மாவட்டம்: இராமநாதபுரம்.

ஒன்றியங்கள்: இராமநாதபுரம், கடலாடி, திருப்புல்லானி, மண்டபம், பரமக்குடி, போகலூர், திருவாடனை, ஆர்.எஸ்.மங்கலம், முதுகுளத்தூர், கமுதி மற்றும் நைனார்கோவில்.

**தொலைநோக்குப் பார்வை :**

தமிழகத்தில் பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்களை சமூக, பொருளாதார ரீதியில் மேம்பாடு அடையச் செய்வதாகும்

**இலட்சியம் :**

- ஜாதி, மதம், இனம், அரசியல் இவைகளுக்கு அப்பாற்பட்டு அனைத்து பனைத்தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்து வாழ்வாதார மேம்பாடடிற்காக பாடுபடுதல்
- தங்களின் தற்போதைய நிலையை உணர்ந்து மேம்பட்ட நிலையை அடைய தேவையான அனைத்து திட்டங்களையும் வகுத்து வளர்ச்சித் திட்டங்களில் அவர்களையும் பங்கேற்க வைத்தல்.
- பனைத்தொழிலாளர்களை அரசு மற்றும் இதர துறைகளுடன் இணைத்து விடுதல்.
- இக்கால குழந்தைகள் வரும் காலத்தில் மாண்புடனும் நலமுடனும் வாழ குழந்தை உரிமைகளை நிலைநிறுத்துதல்
- மேற்கண்ட நோக்கங்களை அடைய ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மென்ட் சொசைட்டி (RWDS) கீழக்கண்ட அணுகுமுறைகளில் பணிசெய்கிறது.
- பனைத்தொழிலாளர்களை ஒன்று திரட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்
- கிராமம், வட்டார, மாவட்ட சங்கங்களை உருவாக்குதல் மற்றும் தொடர்ந்து செயல்படத் தூண்டுதல்
- பனைத்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுடைய குழந்தைகளின் உரிமைகளை வென்றெடுக்க இணைந்த செயல்பாடுகள் முன்மாதிரி முயற்சிகளை மேற்கொள்ள எளிதமைத்து கொடுத்தல்.

**பணித்தள அறிமுகம்:**

இராமநாதபுரம் மாவட்டம் தென்தமிழகத்தின் கிழக்கு கடற்கரையோரமாக அமைந்துள்ளது. இது 4232ச.கி.மீ பரப்பளவு கொண்டது. இதன் மக்கள் தொகை 12,58,772. இது 11 வளர்ச்சி ஒன்றியங்களாகவும் 7 தாலுகாக்களாவும் பிரிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வறுமை, வறட்சி ஆகியவற்றால் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது. இம்மாவட்டத்தில் மொத்த மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் 28% மும் குழந்தைகள் 27.2% மும் உள்ளனர்.

எங்களின் பணித்தள கிராமங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தின் கிராமப்புற பகுதிகளை உள்ளடக்கியது. குடிதண்ணீர் என்பது மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது. பெண்கள் குடிதண்ணீருக்காக பல மைல் தூரம் கால்நடையாக நடந்து தலையில் சுமந்து வருகின்றனர். முக்கியமாக குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான கல்வி சுகாதாரம் போன்றவை எட்டாக்கனியாகவே உள்ளன. அரசு இப்பிரச்சனையில் உரிய முனைப்பு காட்டுவதில்லை. மேலும் இராமநாதபுரம் மாவட்டம் சமூக பொருளாதார அளவில் ஒரு பின்தங்கிய பகுதியாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பணி செய்யும் பகுதிகள்: | மாவட்டம் | - 1 |
| | ஒன்றியம் | - 9 |
| | கிராமங்கள் | - 110 |
| | பஞ்சாயத்து | - 75 |

# செயல்பாடுகள்

### 1. பனைத்தொழிலாளர்கள் சங்கக் கூடுகை :

RWDS பணி செய்யும் கிராமங்களில் உள்ள பனைத்தொழிலாளர்கள் கிளைச்சங்கங்களில் பனைப்பொருட்களை மதிப்புக்கூட்டுப்பொருள்களாக தரம் உயர்த்துதல் மற்றும் சந்தைபடுத்துதல், குழந்தைத்தொழிலாளர் முறை எதிப்பு மற்றும் குழந்தைகள் தொழிலாளர்கள் ஆவதை தடுப்பது குறித்தும் தீர்மானஙகள் நிறைவேற்றப்பட்டது. கடந்த ஆண்டில் 151 கிராம கிளைச்சங்கங்களில் 3124+7713=10445 உறுப்பினர்கள் பங்கேற்புடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாண்டு சங்கம் உறுப்பினர்களின் சிறப்பான செயல்பாட்டின் வாயிலாக பள்ளி இடைநின்ற குழந்தை மற்றும் 7 குழந்தைத்தொழிலாளர்களை மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ளது.



### 2. சிறுவர் மன்றங்கள் மற்றும் கூடுகைகள் :

குழந்தைகளின் பங்கேற்பு உரிமையை உறுதி செய்யவும், அவர்களுக்கு சமூக கல்வியை கற்றுக்கொடுக்கவும் சிறுவர் மன்றங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு சிறுவர் மன்றங்களிலும் அக்கிராமத்தில் உள்ள 8 முதல் 18 வயது வரையிலான குழந்தைகள் உறுப்பினர்களாக உள்ளனர். மாதம் இருமுறை கூடும் இம்மன்றத்தில் குழந்தைகள் தங்களின் பள்ளி அனுபவங்களை பகிர்ந்து கொள்கின்றனர், தங்களின் தேவைகள் மற்றும் பிரச்சனைகள் பற்றி விவாதிக்கின்றனர். மேலும் குழுவாக இணைத்து குழந்தைகளுக்கான புத்தகங்களை வாசித்தல் மற்றும் அதன் கருத்துக்களை விவாதித்தல் ஆகியன நடைபெறுகின்றது. குழுவாக இணைந்து பாரம்பரிய கிராம விளையாட்டுக்களை விளையாடுதல் பொது விசயங்கள் குறித்து பேசுதல் ஆகியனவும் நடைபெறுகின்றது. 52 கிராமங்களிலும் 52 சிறுவர் மன்றக் கூட்டங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றது .

இந்த வருடம் சிறுவர் மன்றங்களில் சிறப்பு பயிற்சியாக குழந்தைகள் மையத் தொகுதி (Child centre modules) - வாழ்க்கை கல்வி - சுய பொறுப்புணர்வு, சுய அடையாளம், சுய மரியாதை, தன்னம்பிக்கை, குழந்தைகள் பங்கேற்பு, ஆக்கப்பூர்வமான சிந்தனைகள், பகுப்பாய்வு மற்றும் அறிவியல் பூர்வமான கலந்துரையாடல்கள், குழந்தைகளின் வளர்ச்சி நிலைகள், பாலின பிரச்சினைகள்

குறித்தான விழிப்புணர்வு, அறிவியல் சிந்தனைகள், குழந்தைகளை பாதிக்கும் காரணிகள் போன்றவை குறித்து யிற்சி அளிக்கப்பட்டது. கோரனா ஊரடங்கு காலத்தில் சிறுவர்மன்றங்களில் 11 வாரங்களுக்கான செயல்பாடுகள் CRY யிலிருந்து வழங்கப்பட்டதை 453 குழந்தைகள் பங்கேற்று ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் செய்து அனுப்பினார்கள். 4329 குழந்தைகளுக்கு மாஸ்க் வழங்கப்பட்டது.



**3. வளரிளம் குழந்தைகள் குழுக் கூடுகைகள் :**

பனைத்தொழிலாளர் கிராமங்களில் உள்ள 11 வயது முதல் 18 வயது வரை உள்ள ஆண் பெண் குழந்தைகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கான சிறப்பு கூடுகைகள் நடைபெற்று வருகின்றன. வளரிளம் குழந்தைகளுக்கான மனோவியல் மற்றும் உடலியல் சார்ந்த கல்வி மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. வளரிளம் வயதில் தான் குழ்நதைக்ள கல்வியை இடைநிறுத்தம் செய்து தொழிலாளர்களாக மாறுகின்றனர். எனவே அவர்களுக்கான கல்வியை தெடார்ந்து கற்பதற்கும், குழந்தைகள் வேலைக்கு செல்வதில் உள்ள சிரமம் மற்றும் ஆபத்துகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. உடல் சுத்தம் மற்றும் ஆரோக்கிய வாழ்விற்கான ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு 11 கிராமங்களில் அமைக்கப்பட்டு கூடுகைகள் நடத்தப்பட்டுள்ளது. இதில் 35 குழந்தைத்தொழிலாளர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதன் மூலம் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும், குழந்தைகள் வேலைக்கு செல்வதனால் கொரனா காலத்தில் வெளியில் செல்லும்போது வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தன்னை பாதுகாத்தல் மற்றும் ஆபத்துகள் குறித்தும் விழிப்புணர்வு பெற்றுள்ளனர்.

**4. வளரிளம் பெண் குழந்தைகள் குழுக் கூடுகைகள்:**

பனைத்தொழிலாளர் கிராமங்களில் உள்ள 11 வயது முதல் 18 வயது வரை உள்ள பெண் குழந்தைகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கான சிறப்பு கூடுகைகள் நடைபெற்று வருகின்றன. வளரிளம் குழந்தைகளுக்கான மனோவியல் மற்றும் உடலியல் சார்ந்த கல்வி மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. வயது வந்த பெண் குழந்தைகளுக்கான தன்சுத்தம பேணுதல், ஹார்மோன் சுரப்பிகள், உடலியல் மற்றும் மனோவியல் மாற்றங்கள்

குறித்து ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இந்த வருடம் 11 கிராமங்களில் காந்திநகர், மேலக்கிடாரம், கன்னிகாபுரி, காமராஜபுரம், மேதலோடை, புதுமாயாகுளம், பூப்பாண்டியபுரம், மாணிக்கநகர், அடஞ்சேரி, அலைகாத்தவலசை, மற்றும் அம்மாபட்டிணம் ஆகிய கிராமங்களில் நடைபெற்றது. இதில் 232 பெண் குழந்தைகள் கலந்து கொண்டு சுய மதிப்பீடு, சுய பொறுப்புறுப்புணர்வு மற்றும் சுய மரியாதை பற்றி கற்றறிந்தனர்.

## 5. மாலை நேரக்கல்வி :

குழந்தைகளுக்கு கொரனா காலகட்டத்தில் பாடசம்மந்தமான சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளவும், கணக்கு மற்றும் ஆங்கிலபாடங்களை புரிந்துகொண்டு எளிமையாக கையாள ஏதுவாக நமது பணித்தளங்களில் உள்ள 6 (கன்னிகாபுரி, பூப்பாண்டியபுரம், அலைகாத்தவலசை, மருதந்தோப்பு நத்தகுளம் ) கிராமங்களில் 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாலை நேரக்கல்வி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தாண்டு 129+163=292 குழந்தைகள் இதன் வாயிலாக பயனடைந்துள்ளனர்.



## 6. அங்கன்வாடி மையங்களில் கலந்தாய்வு கூடுகைகள்:

அனைத்துக் குழந்தைகளையும் அரசுப்பள்ளியில் சேர்க்க ஒவ்வோராண்டும் நாங்கள் பிரச்சாரம் மேற்கொள்கின்றோம். குறிப்பாக எங்களது பணித்தள கிராமங்களிலுள்ள 15 அங்கன்வாடி மையத்திலும் 3 வயது நிரம்பிய குழந்தைகளை அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளை சேர்க்கவேண்டும் என்று 15 கிராமங்களில் பிரச்சராம் மேற்கொள்ளப்பட்டது. கருத்தரங்கம் மூலம் பெற்றோர் மற்றும் கிராம பொதுமக்களுக்கு முன் பருவக் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் குழந்தைகளுக்கும் அங்கன்வாடியில் கிடைக்கக்கூடிய இணைஉணவின் பயன்பாடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் 285 பனைத்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள்,14 ஊராட்சி மன்ற தலைவர்கள், மற்றும் அங்கன்வாடி பணியாளரகள் மற்றும் பொதுமக்கள் தன்னார்வத்துடன் கலந்துகொண்டனர்.





## 7. பள்ளி மேலாண்மைக் குழு கூடுகைகள்:

குழந்தைகளின் ஆரம்பக்கல்வியினை உறுதி செய்யும் நோக்குடன் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 முழுமையாக அமல்படுத்தும்படி அரசினை நிர்பந்திக்கும் பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றோம். இதன் தொடர்ச்சியாக பள்ளி மேலாண்மைக்குழு பயிற்சி பெற்ற பெற்றோர்கள் மற்றும் செயல்வீரர்களுடன் இணைந்து பள்ளி மேலாண்மைக் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டு செயல்பட்டு வருகின்றோம். இந்த வருடம் நமது பணித்தளக் கிராமங்களில் தொத்தமகன்வாடி, காவாகுளம் மற்றும பூப்பாண்டியபுரம் ஆகிய பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக்குழுக் கூட்டம் நடைபெற்றதில் கலந்து கொண்டு பள்ளிகளுக்கான சுற்று சுவர், வகுப்பறைகள், பாதுகாப்பான குடிதண்ணீர் வசதி, ஆண் பெண் குழந்தைகளுக்கான தண்ணீர் வசதியுடன் கூடிய தனித்தனி கழிப்பறை வசதி, பாடவாரியான ஆசிரியர்கள் நியமித்தல், குழந்தைகள் இடைவிலகல் இல்லாமல் கண்காணித்தல் மற்றும் தரமான கல்வி வழங்குதல் குறித்தும் கலந்துரையாடி தீர்மானம் இயற்றினர்.மாணிக்கநகர்கிராமத்திலுள்ளகடலாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கழிப்பறை வசதி கிடைத்துள்ளது.

### 8. குழந்தைகள் தினவிழா

52 கிராமங்களிலுள்ள சிறுவர்மன்றங்களிலும் குழந்தைகள் தினவிழா நிகழ்ச்சியினை ஒவ்வோராண்டும் கொண்டாடி மகிழ்வார்கள். இதன் தொடர்ச்சியாக கொரனா காலத்தில் கன்னிகாபுரி, செங்கழநீரோடை, அலைவாய்க்கரைவாடி, பூப்பாண்டியபுரம், கீழஅல்லிக்குளம், வேப்பமரத்துப்பனை,பெரியநாயகிபுரம், நத்தகுளம், அலைகாத்தவலசை, கோரவள்ளி,கும்பரம் வெள்ளரிஓடை, மேதலோடை வடக்கு, கே.பி. வலசை14 கிராமங்களிலும் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.சுமார் ஐநூறுக்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டனர்.

குழந்தைகளை ஊக்கப்படுத்தும் விதமாக கலைநிகழ்ச்சிகள், கவிதை, பாடல்கள்வாயிலாக குழந்தைகள் தங்கள் திறமைகளைவெளிகாட்டினார்கள். குழந்தைகள் அனைவருக்கும் இனிப்புகள் பரிசுகள் வழங்கி பாராட்டினார்கள்.



புதுச்சேரி மற்றும் தமிழகம்

மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

மாலை நாளிதழ்

குழந்தைகள் தின விழா

ராமநாதபுரம், நவ. 19–

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் ஊராட்சி ஒன்றியம் ரெட்டையூரணி, மானாங்குடி ஆகிய ஊராட்சிகளில், சின்ன ரெட்டையூரணி, கடுக்காய் வலசை கிராமங்களில், ஊரக தொழிலாளர் மேம்பாட்டு அணையம் சார்பில் அதன் இயக்குநர் சாத்தையா அறிவுறுத்தலின் பேரில், நடந்த குழந்தைகள் தின விழாவில் பனைத் தொழிலாளர்கள் சங்க கிளை தலைவர் கவிதா தலைமை வகித்தார். சிறுவர் மன்ற குழந்தைகளிடையே பேச்சுப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை ஊரக தொழிலாளர் மேம்பாட்டு அணையத்தின் பணியாளர் ராஜாத்தி துவக்கி வைத்தார்.

முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் உலக தலைவர்களின் வரலாறு பற்றி சிறுவர்களிடையே பேச்சுப் போட்டி நடைபெற்றது. வெற்றிபெற்ற சிறுவர்களுக்கு பரிசுப் பொருட்கள் மற்றும் முக கவசம், சானிடைசர் வழங்கப்பட்டது. இவ்விழா அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு சமூக இடைவெளியுடன், முகக்கவசம் அணிந்து சிறுவர்கள் மற்றும் ஊர் தலைவர்கள், பெரியவர்கள் கலந்து கொண்டனர். பனைத் தொழிலாளர்கள் சங்க கிளை செயலாளர் சரளா நன்றி கூறினார்.

## 9. அங்கன்வாடி மையங்கள் செயல்படுத்துதல்:

0-5 வயது குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலுட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண் குழந்தைகளின் சத்துணவு, சுகாதார பாதுகாப்பு மற்றும் 3 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் முன்பருவக்கல்வியை உறுதி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. நாங்கள் பணி செய்யும் 52 கிராமங்களில் 34 கிராமங்களில் அங்கன்வாடி மையம் உள்ளது. அங்கன்வாடி மையங்களில் உள்கட்டமைப்பு, மற்றும் செயல்பாடுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனை சீர் செய்ய இந்த வருடம் மண்டபம் ஒன்றியத்தில் அலைகாத்தவலசை,குயவன்குடி கோரவள்ளி,கும்பரம் வெள்ளரிஓடை நத்தகுளம் திருப்புல்லாணி ஒன்றியத்தில் மேதலோடை வடக்கு, செங்கழநீரோடை மற்றும் கடலாடி ஒன்றியத்தில் தொத்தன்மகன்வாடி,காந்திநகர், காவாகுளம், மேலக்கிடாரம், பூப்பாண்டியபுரம், பெரியநாயகிபுரம் , காமராஜபுரம் ஆகிய 15 அங்கன்வாடி மையங்களை தேர்வு செய்து குழந்தை நேய அங்கன்வாடி மையங்களாக மாற்ற சுவர்களுக்கு வர்ணம் பூசியதுடன் பாடத்திட்டம் சார்ந்த ஓவியங்கள் வரைந்து கற்றல் திறனை மேம்படுத்துவதற்கு 31 வகையான கற்பித்தல உபகரணங்களை வழங்கியதுடன் ஆசிரியர்களுக்கு பயிற்சியையும் cry அமைப்பின் உதவியுடன் வழங்கப்பட்டு பெற்றோர்கள் கண்காணிப்பின் வாயிலாக சிறப்பாக செயல்பட ஊக்கப்படுத்தப்பட்டது.

இவ்வாண்டு எடுக்கப்பட்ட தொடர்முயற்சியின் விளைவாக தற்பொழுது 15 கிராமங்களில் உள்ள அங்கன்வாடி மைங்களில் பெற்றோரின் கண்காணிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக மையத்திற்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலும் எடை குறைவு நிலையிலுள்ள குழந்தைகளைக் கண்டறிய குழந்தைகளின் வளர்ச்சி கையேடு வழங்கப்பட்டுள்ளது. பெண் குழந்தைகளின் கல்வியை உறுதிப்படுத்த 52 கிராமங்களிலும்

விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடைபெற்றது. இதில் சுமார் 4300 நபர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.





10. **குழந்தைத் தொழிலாளர் குழு கூட்டம்**

குழந்தை தொழிலாளர் முறையினைத் தடுத்தல் மற்றும் அவர்களை மீண்டும் பள்ளியில் சேர்த்தல் எமது நிறுவனத்தின முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். இவ்வருடம் 165 முழுநேர குழந்தை தொழிலாளர்கள் எமது பணித்தள கிராமங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 85% பேர் கடலாடி ஒன்றியத்தினை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது. பணித்தள கிராமங்களில் உள்ள குழந்தை தொழிலாளர்களை குழந்தை தொழிலாளர் குழு (CLC) என அமைத்துள்ளோம். கடலாடி பகுதியில் 9 கிராமங்களில் குழந்தை தொழிலாளர் குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இக்குழுக்கள் மாதம் ஒருமுறை கூடி பல்வேறு விபரங்களை விவாதிக்கின்றனர். இக்குழு செயல்பாட்டின் வாயிலாக குழந்தைத்தொழிலாளர்கள் தாங்கள் ஒரு குழந்தை என்பதை உணரும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. தன் வயது ஒத்த குழந்தைகள் பிறரிடம் பகிர முடியாத பிரச்சனைகளையும், ஆசைகளையும் தேவைகளையும் பகிர்ந்து கொள்வதுடன் புத்தகம் வாசித்தல், தொழிலாளர் நலன் மற்றும் பாதுகாப்பு சார்ந்த விபரங்களை தெரிந்துகொள்கின்றனர் இவ்வாண்டில் 27 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன இதில் 9+24=33 ஆண் பெண் குழந்தைகள் பங்கேற்று பயனடைந்துள்ளனர். 120 குழந்தைகளுக்கு டிராயிங் செட் சோப் வழங்கப்பட்டுள்ளது.

குழந்தைத்தொழிலாளர் குழுக்கூட்டங்களில் குழந்தைகள் கலந்து கொள்வதன் விளைவாக 5 குழந்தைகள் தனது தொடர்கல்வியை மேற்கொண்டதுடன் தனது சகோதர சகோதரிகளின் படிப்பின் மீது மிகுந்த அக்கறையுடன் உள்ளனர்.



### 11. குழந்தைத் தொழிலாளர்கள் பெற்றோர் குழு

குழந்தைத் தொழிலாளர் முறையினை தடுப்பதற்காக எமது நிறுவனம் பல்வேறு வகையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக குழந்தைத் தொழிலாளர் பெற்றோர்களை ஒரு குழுவாக உருவாக்கியுள்ளோம். இக்குழுவானது பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் கூடுதல் புரிதல் ஏற்படுத்தவும் பெற்றோர்களிடம் உறவினை மேம்படுத்தவும் உதவுகின்றது.

இவ்வாண்டு 1.கீழவலசை, 2.கன்னிகாபுரி, 3.ந.காமராஜபுரம், 4.மாணிக்கநகர், 5.பூப்பாண்டியபுரம், 6.கீழஅல்லிக்குளம், 7.கன்னிராஜபுரம் 8.வெள்ளப்பட்டி, 9. வி.வி.ஆர்.நகர், 10. காந்திநகர் மற்றும் 11.தாவுகாடு மற்றும் 12. அலைகாத்தவலசை ஆகிய கிராமங்களில் குழந்தைத் தொழிலாளர்கள் பெற்றோர் குழு அமைக்கப்பட்டு மாதம் ஒரு முறை கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் குழந்தைகளுக்காக நாம் நேரத்தை ஒதுக்கி அவர்கள் வேலை செய்யும் இடங்களில் நடைபெறும் விபரங்களை பகிர்ந்து கொள்ள முன் வர வேண்டும் போன்ற கருத்துக்கள்பகிரப்பட்டன. இக்கூட்டத்தில் 8+134=142 பெற்றோர்கள்கலந்துகொண்டுள்ளனர்.




12.**ஊராட்சி அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்கூட்டம் :**

இந்த ஆண்டு வெள்ளரிஓடை மற்றும் கோரவள்ளி ஆகிய 2 ஊராட்சிகளில் 1-3-2021ல் ஊராட்சி அளிவலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டம் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இதில் கிராம நிர்வாக அலுவலர், ஊராட்சி செயலர், காவல் துறையினர், பள்ளி தலைமை ஆசிரியர்கள், கிராம சுகாதார செவிலியர், அங்கன்வாடி ஆசிரியர்கள், பெற்றோர், கிளைச்சங்க செயல்வீரர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகள் உறுப்பினர்களாக பங்கெடுத்தனர்.கிராமங்களில் குழந்தைத் திருமணம நடைபெறாத குழந்தைத் தொழிலாளர் இல்லாத ஊராட்சியாக தக்க வைக்க குழந்தைகள் பாதுகாப்பு குழுவின் செயல்பாடு குறித்த தகவல் பலகை வைக்கவும் , POCSO சட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

**13. பள்ளி மற்றும் அங்கன்வாடிக்கு புதிய கட்டிடம் பெற நடவடிக்கை எடுத்தல்**

கன்னிகாபுரியிலுள்ள கடலாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டிடம் மற்றும் அங்கன்வாடி கட்டிடம் மிகவும் மோசமான நிலையிலுள்ளது.அதற்கு புதிய கட்டிடம் பெற மாவட்ட ஆட்சித்தலைவரிடம் 4-1-2021அன்று நடவடிக்கை எடுக்க கன்னிகாபுரி கிராம மக்கள் சிறுவர் மன்றக் குழந்தைகள் மனுக் கொடுத்துள்ளனர்.

**14. குழந்தைத் திருமணத்தை தடுத்தல்:**

வரதட்சனையின் தீமைகள் விளைவுகளால் பல பெண்களின் வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது. பணித்தள கிராமங்களில் காவாகுளம் கிராமத்தில் ஒரு குழந்தைத் திருமணத்தை தடுத்து நிறுத்தப்பட்டது.

**15. குழந்தைகளுக்கு சுகாதார கிட் வழங்குதல்**

கொரனா தொற்றிலிருந்து தங்களை(குழந்தைகளை) காப்பாற்றிக்கொள்ள பள்ளி அங்கன்வாடி பணியாளர்கள் ஆஷா பணியாளர்கள் சங்கம் உறுப்பினர்கள் ஒற்றைப்பெற்றோர் குழந்தைகள் CRY யிலிருந்து வழங்கப்பட்ட ஷாம்பு 4000 ஹிமாலயா டூத் பேஸ்ட் மாஸ்க்-4800 சானிடைசர2500 வழங்கப்பட்டது.





## 16. வீடு சந்திப்பு

பெற்றோர்களிடம் பள்ளி இடைவிலகல், குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தைத் திருமணம் ஆகியவற்றைக் குறித்து அதிகமான விழப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் அவர்களை நேரடியாக வீடுகளில் தனித்தனியாக எமது பணியாளர்கள் சந்திக்கின்றனர். இதில் ஒரு குடும்பத்தில் உள்ள அனைவருடனும் நெருக்கமான உறவு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் குழந்தைகளின் உரிமைகள் தொடர்பாக அனைவருக்கும் புரிதல் ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டில் 12252 குடும்பங்களை சந்தித்துள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது.



## 17. 18 வயதுவரை அனைவருக்கும் கல்வி என்ற உலகலாவிய நிலைப்பாட்டை உறுதிபடுத்தும் வகையில் விழிப்புணர்வை அதிகரித்தல்(குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு)

18 வயதுவரை அனைவருக்கும் கல்வி என்ற உலகலாவிய நிலைப்பாட்டை உறுதிபடுத்தும் வகையில் விழிப்புணர்வை அதிகரித்தல்(குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு) தொடர்பான

கூட்டம்11-3-2021ல் ஐஸ்வர்யா கூட்ட அரங்கம் ராமநாதபுரத்தில் நடைபெற்றது. இதில் குழந்தைகளுக்காக வேலை செய்யும் அமைப்புகளான குழந்தைகள் நலக்குழுமம் இளஞ்சிறார் நீதிக் குழுமம் CACL கன்வீனர்தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் சங்கப் பொறுப்பாளர்கள் பெண் குழந்தைகள் மாநிலப்பனைத் தொழிலாளர்சங்கப் பொறுப்பாளர்கள் சமகல்விஇயக்கத்தின் பொறுப்பாளர்கள் 50 க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர்.




**18. கணினி மையம்**

கொரனா ஊரடங்கு காலத்தில் பூப்பாண்டியபுரம் கிராமத்திலுள்ள **குழந்தைகள்** கணினிமையத்தில்12+13=25 குழந்தைகள் கணினி மையத்திற்கு சென்று இலவசமாக கணினிக்கல்வியை கற்று வருகின்றனர். குழந்தைத்தொழிலாளர்களும் ஆர்வமுடன் சென்று கணினிக்கல்வியை கற்கின்றனர்.

## 19. புதிய ஆரம்பப்பள்ளி

செங்கலநீரோடை கிராமத்தில் உள்ள 5 முதல் 10 வயது வரையிலான குழந்தைகளின் ஆரம்பக்கல்வியினை உறுதி செய்வது எமது நிறுவனத்தின் மிக முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக உள்ளது. செங்கலநீரோடை கிராமம் காஞ்சிரங்குடி ஊராட்சி, கீழக்கரை நகருக்கு அருகில் உள்ளது. இக்கிராமத்தில் மொத்தம் 250 மக்களும் 3 முதல் 5 வயது குழந்தைகள் 52 பேரும் உள்ளனர். இங்கு ஆரம்பப்பள்ளி இல்லாத காரணத்தால் குழந்தைகள் கீழக்கரை நகருக்கு 12 கி.மீ. தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளது, ஏனெனில் இக்கிராமத்திற்கு பேருந்து வசதியும் செய்து தரப்படவில்லை. இச்சூழல் 5-10 வயது குழந்தைகள் பள்ளி இடைவிலகலாவதை மேலும் அதிகரிக்கின்றது.

இப்பிரச்சனைகள் தொடர்பாக கிராம பிரதிநிதிகள் அடங்கிய கல்வி மேம்பாட்டுக் குழு பல்வேறு நடவடிக்கைகளை கடந்த இரண்டு ஆண்டுகளாக எடுத்து வருகின்றது. குறிப்பாக செங்கலநீரோடை கிராமத்தினர் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் வழக்குத்தொடர்ந்து புதிய ஆராம்பப்பள்ளி பெறுவதற்கான உயர்நீதிமன்ற ஆனை

பெற்றுள்ளனர். அதன் தொடர்ச்சியாக செங்கலநீரோடை கிராமத்திற்கு 10 ஆண்டுகளாக போராடியதன் விளைவாக இவ்வாண்டு புதிய ஆராம்பப்பள்ளி கிடைக்கப் பெற்று 17 குழந்தைகள் உள்ளூரில் படித்து பயன்பெற்று வருகின்றனர்.




### 20. அலைபேசி - தகவல் மேலாண்மைத் திட்டம்

சென்ற ஆண்டிண் தகவல் மேலாண்மைத் திட்டம் குறித்த பயிற்சியின் தொடர்ச்சியாக களப்பகுதிகளில் தொகுத்த விபரங்களை அலைபேசி வாயிலாக பதிவேற்றம் செய்வதற்கு பணியாளர்களுக்கு 6 கையகல அலைபேசிகளில் (Tabs) 2362 குடும்பங்கள4188 குழந்தைகள் ,34 அங்கன்வாடி, 38 பள்ளிகள், 52 கிராமஙகள், 3807 குழந்தைத்தொழிலாளர் மற்றும் இடம்பெயர்வு,பள்ளிகளில் தக்க வைத்தல் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனர்.

### இயக்குநர் அவர்களின் பிற செயல்பாடுகள்

10.06.2020 - மதுரை கதர் கிராம தொழில்கள் ஆணைய இயக்குநர் அவர்களைச் சந்தித்து கருப்பட்டி உற்பத்தி செய்வது தொடர்பான ஆவனங்கள் வழங்கப்பட்டது.

20.01.2021- திருச்சியில் சாம் நிறுவணத்தால் டி.எம். எஸ்.எஸ்.எஸ். கூட்ட அரங்கில் நடைபெற்ற FCRA சம்பந்தமான கூடுகையில் கலந்து கொள்ளப்பட்டது.

01.02.2021 - வாணி நிறுவணத்தால் நடத்தப்பட்ட FCRA சம்பந்தமான காணொலி காட்சி கூடுகையில் கலந்து கொள்ளப்பட்டது.

12.02.2021 முதல் 14.02.2021 மூன்று நாட்கள் புதுக்கோட்டையில் ரைட் சேரிங் அமைப்பு நடத்திய பெண்கள் வருமானம் ஈட்டுதல் சம்பந்தமான பயிற்சியில் கலந்து கொள்ளப்பட்டது.

17.03.2021 முதல் 18.03.2021 சென்னை சபரி விடுதியில் நடைபெற்ற மாநில அளவிலான 18 வயது வரை பெண் குழந்தைகள் கல்வி உரிமைச்சட்டம் குறித்தான கூடுகையில் கலந்து கொள்ளப்பட்டது.

------------------------------ * --------------------------------------